[19th August 1961

SRI K. VINAYAKAM : May I know the amount of cash that is missing from the cash counter?

THE HON. SRI R. VENKATARAMAN : About Rs. 900, Sir.

Cattle-breeding

* 1254 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாடுகள் வளர்ச்சி திட்டத்துக்கான ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைப்பதுபற்றி அரசாங்கத்தினரால் பரிசீலனை நடத்தப்பட்டு வருகின்றதா ?

(இ) அப்படியானால், இந்நிலையம் எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் ?

(உ) மாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எந்தெந்த நாடுகளிலிருந்து உயர்ந்த ரகக் காளைகளும், பசுக்களும் இறக்குமதி செய்யப்படும் ?

(எ) இத்திட்டத்திற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*d*) In the Third Five-Year Plan a sum of Rs. 10.00 lakhs has been provided for starting a Livestock Research Station in this State. The exact location of the Farm, the breeds of cattle to be imported for the Farm and other details have not yet been settled.

SRI P. G. MANICKAM : மேற்கண்ட திட்டமானது மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்தெந்த இடங்களில் ஏற்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எந்தெந்த இடங்களில் ஏற்படுத்த வேண்டும் என்பதைப்பற்றி இனிதான் முடிவு செய்யவேண்டும்.

SRI A. VEDARATHNAM : இதுவரையில் நம்முடைய அனுபவத்தில் விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய நல்ல ஜாதிப் பசு என்று எந்த ஜாதிப் பசுவைக் கண்டுபிடித்திருக்கிறீர்கள் ? அதை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சி உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : குறிப்பிட்ட ஒரு ஜாதிப் பசு, ஒரு ஜாதி மாடு என்று சொல்வதற்கில்லை. இரண்டு மூன்று இனங்கள் தெற்கு மாவட்டங்களில் இருக்கின்றன. எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த இனம் தகுதியாக இருக்கின்றனவோ அதற்குத் தகுந்தாற்போல் விருத்தி செய்யப்படும்.

SRI R. SRINIVASA IYER : ஒரத்தநாட்டிலே நடக்கும் ஆராய்ச்சியைத் தவிர வேறு எந்தத் திட்டமாவது இருக்கிறதா ? இந்தத் திட்டத்திலே கால்நடைகள் என்று சொல்வது மாடுகள் மாத்திரமா ? இதில் முக்கியமாக ரோமங்கள் உள்ள ஆடுகளின் வளர்ப்பை ஆராய்ச்சி செய்வதற்கு ஏதாவது திட்டமிருக்கிறதா ?

19th August 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மாடுகள் ஓரத்த நாட்டில் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இது தவிர ஆட்டுப் பண்ணையும் இருக்கிறது. அது மாத்திரமல்ல, எருமை மாட்டுப் பண்ணையும் நடத்த உத்தேசம் இருக்கிறது. நீலகிரியில் நடத்தப்பட்டுவருகிற மில்க் காலனியை அரசாங்கமே எடுத்து நடத்தும். இது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப் படும்.

Harijan Hostels (Salem)

* 1255 Q.—SRI M. K. MARIAPPAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சேலம் ஜில்லாவில் எத்தனை ஹரிஜன மாணவர் விடுதிகள் உள்ளன ?

(இ) சேலம் வட பகுதியில் எத்தனை விடுதிகள் உள்ளன ?

THE HON. SRI P. KAKKAN : (a) Twenty-one Harijan Hostels.

(b) Seven Harijan Hostels.

SRI M. K. MARIAPPAN : வடக்கு ஜில்லாவாக இருக்கும் சேலம் மாவட்டம் மிகவும் பிற்போக்காகவும் கல்வித்தரத்தில் குறைந்திருப்பதற்கும் காரணம் அங்கே போதிய ஹாஸ்டல்கள் இல்லாததுதானா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : ஜில்லாவில் வடக்கு தெற்கு என்று பார்ப்பது கிடையாது. எங்கெல்லாம் ஹாஸ்டல்கள் தேவையோ அங்கெல்லாம் ஏற்படுத்துகிறோம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Overbridges (Railway Level Crossing)

1256 Q.—SRI P. G. MANICKAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் ஆண்டு ஜூன் மீ 24-ந் தேதியில் நடைபெற்ற சென்னை ராஜ்ய போக்குவரத்து போர்டு கூட்டத்தில் ரயில்வே லெவல் கிராசிங்குகளில் மேல் பாலம் கட்டத் தேவைப்படும் முழுச் செலவையும் சர்க்காரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், மேல் பாலம் கட்டப்பட வேண்டிய பிரதேசங்களிலிருக்கும் ஸ்தல ஸ்தாபனங்களை இதற்காகப் பங்குத் தொகை கேட்கக் கூடா தென்றும் சிபாரிசு செய்யப்பட்டு அரசாங்கத்திற்கு அனுமதிக் கப்பட்டிருக்கிறதா ?

(இ) அப்படியானால், இச் சிபாரிசின் பேரில் அரசாங்கத்தார் எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) The Government of India were requested to liberalise the existing principles governing the constructions of over/under bridges in replacement of level crossings. As the Government of India have not agreed to revise Railway Code Rules, the question